SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல்,
சர்வோ ஆயில்
சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
விசுவாவசு வருடம் சித்திரை 7 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ஷவ்வால் 21
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 20, 2025 ● வெளியூர்: 21-4-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 275 ● 8 பக்கம் ● ரூ.6

## உலகெங்கும் வெறுப்பு நீங்கி நல்லிணக்கம் செழிக்கட்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈஸ்டர் வாழ்த்து



**சென்னை, ஏப். 20-**

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பிறகு 3வது நாள் உயிர்த்தெழுந்ததாக கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இதன் நினைவாக இன்று உலகம் முழுவதும் ஈஸ்டர் பண்டிகையை கிறிஸ்தவர்கள் கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர். ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் இன்று சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி பேராலயம் மற்றும் திருச்சியில் உள்ள உலக மீட்பர் பசிலிக்கா தேவாலயத்தில் நடைபெற்ற ஈஸ்டர் திருநாள் சிறப்பு பிரார்த்தனையில் திரளானோர் பங்கேற்றனர். இந்த நிலையில் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

அமைதி, பொறுமை, இரக்கம், இன்னா செய்தாருக்கும் நன்மையே செய்யும் நற்குணம் ஆகியவற்றின் பேருருவமான இயேசு பிரானின் வழியைப் பின்பற்றி நடக்கும் கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் எனும் உயிர்ப்பு ஞாயிறு நாள் வாழ்த்துகள்! உலகெங்கும் வெறுப்பும், வன்முறையும் நீங்கி நல்லிணக்கம் செழித்திட இயேசு பெருமகனாரின் போதனைகள் வழிகாட்டட்டும்! அன்பே வெல்லட்டும். உலகை ஆளட்டும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீரில் திடீர் வெள்ளம், நிலச்சரிவு: 3 பேர் பலி



**ஸ்ரீநகர், ஏப். 20-**

ஜம்மு – காஷ்மீர் மாவட்டம் ரம்பன் மாவட்டத்தில் நேற்று இரவு கனமழை பெய்தது. இதன் காரணமாக அம்மாவட்டத்தில் உள்ள ஜம்பா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கனமழை காரணமாக நிலச்சரிவும் ஏற்பட்டது.

இந்நிலையில், ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் அருகே இருந்த தரம்கண்ட் என்ற கிராமத்தை சூழ்ந்தது. மேலும், நிலச்சரிவால் கிராமத்தில் இருந்த 10க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் கிராமத்தில் இருந்த 100க்கும் மேற்பட்டோரை உயிருடன் மீட்டனர். அதேவேளை, வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி ஒருவர் மாயமான நிலையில் அவரை தேடி வருகின்றனர்.

## ஈஸ்டர் பண்டிகை: தமிழ்நாட்டில் உள்ள தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனை



**சென்னை, ஏப். 20-**

கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய பண்டிகளில் ஈஸ்டரும் ஒன்று. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட நிலையில் அவர் 3வது நாளில் உயிர்த்தெழுத்தார் என்று பைபிள் கூறுகிறது.

இயேசு உயிர்த்தெழுந்த இந்த நாளை கிறிஸ்தவர்கள் ஈஸ்டராக கொண்டாடி வருகின்றனர். அதன்படி, உலகம் முழுவதும் இன்று ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில், தமிழ்நாட்டிலும் ஈஸ்டர் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

### காலவரையறையைச் சரியாக செயல்படுத்தி

# சம நியாயம் கொண்ட தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும்

### ஆங்கில நாளிதழுக்கு மு.க.ஸ்டாலின் பேட்டி

**சென்னை, ஏப். 20-**

தி.மு.க. தலைவர் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:

கே: பாராளுமன்ற தொகுதி மறுசீரமைப்பை நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள்?

பதில்: தொகுதி மறுசீரமைப்பைத் தி.மு.க எதிர்க்கவில்லை. எதிர்வரவுள்ள மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பைத்தான் உறுதியாக எதிர்க்கிறோம்.

மக்கள்தொகைக் கட்டுப்பாடு என்பது நாட்டின் பொருளாதாரம் மக்களின் நல்வாழ்வு வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 50 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. நாட்டு நலனில் அக்கறை உள்ள மாநிலமாகத் தமிழ்நாடும் தென்மாநிலங்களும் இருந்த காரணத்தால் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தினோம்.

மக்கள்தொகைப் பெருக்கம் என்ற நெருக்கடியை, மனிதவள ஆற்றல் என்ற சாதகமான அம்சமாக மாற்றியதில் தமிழ்நாட்டின் பங்கு முக்கியமானது. நாட்டின் நலனுக்காக ஒன்றிய அரசு முன்வைத்த ஒரு திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றிய தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்குத் தண்டனையாக, அதே மக்கள்தொகையை அடிப்படையாக வைத்து நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைப்பது என்ன நியாயம்? இந்த அளவுகோலைத் தான் எதிர்க்கிறோம்.

தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை நிறுத்த பாராளுமன்றத்தில் உங்களிடம் போது மான எம்.பி.க்கள் உள்ளதா?

பதில்: இரண்டே இரண்டு எம்.பி.க்களைக் கொண்டிருந்த தி.மு.க.தான், இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற உறுதி மொழியை இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களிடமிருந்து பெற்றது.

மாநிலங்களவையில் ஒற்றை எம்.பி.யாக இருந்த எங்கள் இயக்கத்தின் நிறுவனர் பேரறிஞர் அண்ணா, இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளுக்காகவும், அந்தந்த மாநிலங்களின் உரிமைக்காகவும் முழங்கினார். பண்பட்ட ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றக்கூடிய அரசாங்கமும் அன்றைக்கு இருந்தது. தற்போது நியாயத்தைப் பெறுவதற்கு தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

அந்த வகையில், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப் பினால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களும் நாடாளுமன்றத்தில் ஒருங்கிணைந்து நிற்கும் என்ற நம்பிக்கை உள்ளது. நேரடியாகப் பாதிக்கப்படாத மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளின் எம்.பி.க்களும்கூட, மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது என்பது மாநில உரிமைகளுக்கு மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கு விடுக்கப்படும் சவால் என்பதை உணர்ந்து, இந்த முயற்சிக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புகிறேன்.

பதில்: நாங்கள் அதைத் தடுக்கவில்லை. நியாயமான காரணங்களை முன்வைத்து, அதனைத் தள்ளி வைக்கக் கோருகிறோம். ஏற்கெனவே இரண்டு சட்டத்திருத் தங்களுடன் தள்ளிவைக்கப்பட்டதை, மீண்டும் ஒருமுறை அதே வழியில் தள்ளிவைத்து, காலவரையறையைச் சரியாக செயல்படுத்தி, சம நியாயம் கொண்ட தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, நாட்டின் வளர்ச்சிக்குத் துணைநிற்கும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை வஞ்சிக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

கே: தொகுதி மறுசீரமைப்பு ஏற்படும் போது அதனால் பாதிக்கப்படும் மற்ற மாநிலங்களை ஒருங்கிணைக்க நீங்கள் முன்னணியில் இருந்தீர்கள். அவர்களின் பதிலில் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?

பதில்: கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் மார்ச் 22 அன்று சென்னையில் கூட்டப்பட்டு 3 முதல்அமைச்சர்கள், 2 துணை முதல் அமைச்சர்கள், முன்னாள் முதல்அமைச்சர் உள்பட 8 மாநிலங்களின் பங்கேற்புடன் தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இது முதல் கட்ட வெற்றி. போராட்டம் தொடரும்.

கே: பிரதமரை சந்திக்க நேரம் கேட்டிருந்தீர்களே பிரதமர் மோடியை தமிழக எம்.பி.க்கள் எப்போது சந்திப்பார்கள்? பிரதமரிடம் இருந்து சாதகமான பதில் வரும் என எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: பிரதமர் மோடியிடம் நேரம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறோம். அவரும் ஒரு மாநிலத்தின் முதல்அமைச்சராக இருந்தவர். மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை உணர்ந்தே இருப்பார். அதனால், அவரது அழைப்பை நம்பிக்கையுடன் எதிர்பார்த் திருக்கிறோம்.

கே: தமிழ்நாட்டில் நிலவும் பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசை திருப்பவே தொகுதி மறுவரையறை பிரச்சினையை நீங்கள் கையில் எடுத்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகிறார்களே அதுபற்றி உங்கள் பதில்?

பதில்: தி.மு.க.வின் மாநில உரிமைக் குரலுக்கு நியாயமான பதில் சொல்ல முடியாதவர்கள்தான் திசை திருப்புகிறார்கள். ஒன்றிய அரசு வெளியிடும் புள்ளிவிவரங்கள், அறிக்கைகளின்படியே தமிழ்நாடு பல்வேறு இலக்குகளில் முன்னேறியிருக்கிறது. திராவிட மாடல் அரசின் திட்டங்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போய்ச் சேர்ந்திருக்கிறது. மக்களின் ஆதரவு தி.மு.க.வுக்கு வலுவாக உள்ளது. எனவே, திசை திருப்ப வேண்டிய சூழலோ அவசியமோ எங்களுக்கு கிடையாது.

1971 மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு என்பது ஏற்கெனவே இந்திய அளவில் விவாதிக்கப்பட்டதுதான். அது மேலும் 25 ஆண்டுகளுக்குத் தொடர வேண்டும் என்றுதான் வலியுறுத்துகிறோம்.

கே: தொகுதி மறு சீரமைப்பு நடவடிக்கை குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை என்று பிரதமர் மோடி அரசு சொல்கிறதே?

பதில்: அதை பிரதமர் மோடி நாடாளுமன்றத்திலோநாட்டு மக்களுக்கோ ஏன் இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எங்களின் கூட்டுக்குழு வின் சார்பில் இது பற்றி தெளிவுபடுத்த வேண்டும் என பிரதமரிடம் கேட்டும் இதுவரை ஏன் பிரதமர் தெளிவுபடுத்திமக்கள் தொகையை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு பாதிப்பு வராது என்ற உறுதி மொழியை ஏன் அளிக்கவில்லை?

பா.ஜ.க. அரசு சொல்வதும் செய்வதும் முற்றிலும் மாறுபாடாக உள்ளது என்பதற்கு எத்தனையோ முன்னுதாரணங்கள் உண்டு. வக்பு வாரிய திருத்தச் சட்டம் தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் உறுப்பினர்கள், குறிப்பாக தி.மு.க.வின் சார்பில் பங்கேற்றிருந்த உறுப்பினர்கள், முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்வைத்த வாதங்கள், கோரிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப் பட்டு, பா.ஜ.க. விரும்பியபடி அந்த சட்டம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது. நியாயமற்ற அரசாக பா.ஜ.க செயல் படுவதால்தான் தொகுதி மறுசீரமைப்பு குறித்த அதன் தெளிவற்ற விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை.

## ஆர்.என்.ரவி கவர்னர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்: ம.தி.மு.க. நிர்வாகக் குழு கூட்டத்தில் தீர்மானம்



**சென்னை, ஏப். 20-**

ம.தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டம், சென்னை, எழும்பூரில் உள்ள தலைமைக் கழகத்தில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவியை கவர்னர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:

தீர்மானம்–1: கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியில் மிகப்பெரிய உயரத்தை தமிழ்நாடு அடைந்திருக்கிறது. இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக திகழும் தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஆளுமைத் திறனோடு வழிநடத்தும் திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதுடன் 2026 சட்டப்பேரவை தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று நல்லாட்சி தொடர வேண்டுமென்று ம.தி.மு.க. நிர்வாக குழு விழைகிறது.

தீர்மானம்– 2: இந்தியாவில் மாநிலங்கள் அதிகபட்ச தன்னாட்சி உரிமை பெற்றிடவும், உரிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும், மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய்ந்து பரிந்துரை அளிக்கவும் மூன்று பேர் கொண்ட உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது தமிழ்நாடு அரசு. சட்டப்பேரவையில் மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு உயர்நிலைக் குழுவை அமைத்திருக்கிற தமிழ்நாடு அரசுக்கு ம.தி.மு.க. நிர்வாகக் குழு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் –3: இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக செயல்படுவதையும், கவர்னர் பொறுப்பை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தி வருவதையும் சுப்ரீம் கோர்ட்டு தெளிவாக உணர்ந்து கொண்டு கவர்னர் ஆர்.என்.ரவிக்கு சுப்ரீம் கோர்ட்டு கடும் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. கவர்னர் பதவியில் நீடிக்கும் தார்மீக தகுதியை ஆர்.என். ரவி இழந்துவிட்டார். எனவே அவரை ஜனாதிபதி தமிழ்நாடு கவர்னர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று ம.தி.மு.க. நிர்வாக குழு கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்–4: இந்திய நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்கும் வகையில் மத்திய பா.ஜ.க. அரசு முத்தலாக் தடை சட்டம், குடியுரிமை திருத்தச் சட்டம் போன்றவற்றை நிறைவேற்றியது. அந்த வரிசையில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள வக்பு திருத்தச் சட்டம் நாட்டின் பன்முகத்தன்மைக்கும் அரசியல் சட்டத்தின் தனிமனித உரிமைக்கும் சவால் விடுகிறது.

இச்சட்டத்தை எதிர்த்து ஜனநாயக வழியில் போராடி முறியடிக்க வேண்டும் என்று ம.தி.மு.க. நிர்வாகக் குழு அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் –5: இலங்கை ராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி ராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது மட்டுமின்றி, தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் கொடும் துரோகம் ஆகும். நாள்தோறும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் குறித்து இந்தியப் பிரதமர் இலங்கை அதிபரிடம் கண்டனத்தை பதிவு செய்யாததை இக்கூட்டம் கண்டிக்கிறது.

தீர்மானம் –6: தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், அரசு அலுவலகங்களில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழியை பயன்படுத்தவும், அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் என தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ம.தி.மு.க. நிர்வாகக் குழு வரவேற்று, இதனைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்– 7: தெலுங்கு பட இயக்குனர் கோபிசந்த் மலினேனி இயக்கத்தில் சன்னி தியோல் நடிப்பில் கடந்த 10ம் தேதி ஜாட் என்ற இந்தி திரைப்படம் வெளியானது. இந்த திரைப்படத்தில், ஈழத் தமிழர் விடுதலை போராட்டத்தை இழிவுபடுத்தும் வகையில் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் ஜாட் திரைப்படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தீர்மானம் –8: மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 32வது ஆண்டு தொடக்க விழாவை மே 6ம் தேதியிலிருந்து தொடர்ந்து இரண்டு வார காலத்திற்கு கழகத் தோழர்களின் இல்லங்களில் கொடியேற்றுவது, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்குவது, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை நல்குதல், ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு அளித்தல் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தி தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவது என்று கழக நிர்வாகக் குழு தீர்மானிக்கிறது.

தீர்மானம்–9: தமிழ்நாடு கவர்னரை சுப்ரீம் கோர்ட்டு மிகக் கடுமையாக கண்டித்திருக்கின்ற நிலையில், அவர் கவர்னர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் வகையிலும், மதச்சார்பின்மை, நாட்டின் பன்முகத்தன்மையைச் சீர்குலைக்கும் வகையிலும் கடந்த பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது நாடாளுமன்றத்தில் வக்பு சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி சிறுபான்மை மக்களை அச்சுறுத்தி வருகிறது. இச்சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஏப்ரல் 26ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் மண்டல வாரியாக ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தப் போராட்டத்தை எழுச்சியுடன் முன்னெடுத்து வெற்றிபெறச் செய்யுமாறு கழகத் தோழர்களை இந்த நிர்வாகக் குழு கேட்டுக்கொள்கிறது.

# தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ காப்பீடு திட்டம் விளம்பர பலகை வைக்க வேண்டும்

## ஆட்சியரிடம் அசோக்பாபு எம்.எல்.ஏ., மனு



புதுச்சேரி, ஏப். 20-

புதுச்சேரி கலெக்டர் குலோத்துங்கனை, அசோக்பாபு எம்.எல்.ஏ., நேற்று நேரில் சந்தித்து மனு அளித்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது புதுச்சேரி மாநிலத்தில் பிரதமர் காப்பீடு திட்டம் (ஆயுஷ்மான் பாரத்) அமலில் உள்ள அனைத்து தனியார் மருத்துவமனை வாயிலிலும் மருத்துவ காப்பீடு திட்டம் தொடர்பாக பொதுமக்கள் அனைத்து விவரங்களையும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய அளவில் விளம்பரப் பலகை வைக்க வேண்டும். மேலும், பிரதமர் மருத்துவ காப்பீடு திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகளிடம் கூடுதலாக எந்த ஒரு கட்டணமும் வசூல் செய்ய கூடாது என்று தனியார் மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்த கோரியும் மாவட்ட ஆட்சியரிடம், சட்டமன்ற உறுப்பினர் அசோக்பாபு எம்.எல்.ஏ., கோரிக்கை மனு அளித்தார்.

மனுவைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், பிரதமர் காப்பீடு திட்டம் (ஆயுஷ்மான் பாரத்)அமலில்உள்ள மருத்துவமனைகளை ஆய்வு செய்து உடனடியாக சுற்றறிக்கை அனுப்பி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

# விளையாட்டுப் பொருட்கள் வழங்கல்



மணவெளி தொகுதிக்குட்பட்ட ஓடவேலி கிராமத்தில் இருக்கும் இளைஞர்களையும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக பெத்தாங் விளையாட்டுப் பொருட்களை கனவுகள் மெய்ப்படும் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் முருகன் (எ) பெருமாள் இளைஞர்களுக்கு வழங்கினார்.

# புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் சிலைக்கு ஆணையர் மாலை அணிவிப்பு



புதுச்சேரி, ஏப். 20-

புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து திருக்குறள் கூறும் நிகழ்வு மாதந்தோறும் 20ஆம் தேதி நடைபெற்று வருகிறது. இம்மாத நிகழ்வில் புதுச்சேரி உழவர்கரை நகராட்சி ஆணையர் ஆ.சுரேஷ் ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவர்களுக்கு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பொன்னாடை அணிவித்து பாராட்டினார். உடன் செயலர் சீனு.மோகன்தாசு, துணைத்தலைவர் தமிழ் மாமனி ந. ஆதிகேசவன், பொருளர் மு. அருள்செல்வம், துணைத்தலைவர் ப. திருநாவுக்கரசு, துணைச் செயலர் தெ.தினகரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலைமாமணி எம்.எஸ்.ராஜா, தமிழ்மாமணி அ.உசேன், பொறிஞர் மு.சுரேஷ் குமார், அ.சிவேந்திரன்,கவிஞர் இர.ஆனந்தராசன், மாணவி ஹர்ஷிகா, சிவகுரு, கிஷோர் ஆகியோர் உள்ளனர். நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் புதுச்சேரி நகராட்சி ஆணையர் ஆ.சுரேஷ்ராஜ் மற்றும் புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து திருக்குறள் புத்தகம் வழங்கினார்கள்.

# திமுக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு திருமயம் தெற்கு ஒன்றிய அமைப்பாளர் நியமனம்



திமுக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு திருமயம் தெற்கு ஒன்றிய அமைப்பாளராக சிக்கந்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# அழகிரிநாத சுவாமி கோவில் குடமுழுக்கு விழா



சேலம் கோட்டை, அழகிரிநாத சுவாமி கோவில் அஷ்டபந்தன மஹாகுடமுழுக்கு பெருவிழா சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம்.

# 581 பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணி ஆணை வழங்கல்



அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 51 ஊராட்சிகளை சார்ந்த 581 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் வழங்கினார்கள்.

# கலைஞர் கைவினை திட்ட துவக்க விழவை பார்வையிட்ட ஆட்சியர்




தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கலைஞர் கைவினை திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்கள் தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில், கலைஞர் கைவினை திட்டத்தில் பயன்பெறும் தொழில் முனைவோர்கள் இந்நிகழ்ச்சியினை காணொலி காட்சி வாயிலாக பார்வையிட்டனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கிய அமைச்சர்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை அமைச்சர் ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் வழங்கினார்.

# செடிலாடும் செங்கழு நீர் மாரியம்மன் கோயில் 111ஆம் ஆண்டு தேர் திருவிழா

## முதல்வர் ரங்கசாமி பங்கேற்பு



புதுச்சேரி, ஏப். 20-

புதுச்சேரி அரியாங்குப்பம் செடிலாடும் செங்கழு நீர் மாரியம்மன் ஆலய 111ஆம் ஆண்டு தேர் திருவிழா விமர்சையாக நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா என்ற கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

புதுச்சேரி அரியாங்குப்பம் செடிலாடும் செங்கழுநீர் மாரியம்மன் ஆலயத்தின் 111 ஆம் ஆண்டு செடல் தேர் திருவிழா 10ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து அருள்மிகு அம்மனுக்கு பல்வேறு அபிஷேகம் ஆராதனைகள் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வீதி உலாவும் நடைபெற்றது.

முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முதலமைச்சர் ரங்கசாமி, காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் ஆகியோர் தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து தேர் திருவிழாவில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என்ற பக்தி பரவசத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து வழிபட்டனர்.

தேரோட்டமானது அரியாங்குப்பம் நான்கு மாட வீதிகள் வழியாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்து அடைந்தது இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளை பெற்று சென்றனர். தொடர்ந்து தேர் திருவிழாவில் விழா குழுவைச் சேர்ந்த தொழிலதிபர் கணபதி ஏற்பட்ட பேரில் தேர் திருவிழாவில் கலந்துகொண்ட அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக தர்பூசணி வழங்கப் பட்டது. முன்னதாக காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினர் விஜயலட்சுமி ஜெயமூர்த்தி சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் என்ஆர் காங்கிரஸ் அரியாங்குப்பம் தொகுதி தலைவர் முருகராஜ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தேரோட்டத்திற்கான ஏற்பாடுகளை ஆலயத்தின் நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# சேலம் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி கண் ஒளியியல் பிரிவின் மூலம் தேசிய அளவிலான கருத்தரங்கம்



புதுச்சேரி, ஏப். 20-

விநாயகா மிஷனின் சேலம் விம்ஸ் வளாகம், புதுச்சேரி மற்றும் சென்னை பையனூர் ஆகியவற்றில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் மூலம் தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் செயல்முறை திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது.

விநாயகா மிஷனின் சேலம் விம்ஸ் வளாகம், சென்னை பையனூர் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் மூலம் தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் செயல்முறை திறன் மேம்பாட்டு பயிற்சியானது இரண்டு நாட்கள் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி பாண்டிச்சேரியில் நடத்தப்பட்டது.

முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருந்தோரை கண்ணொலியில் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ்சுடர் வரவேற்று பேசினார். கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து தலைமை உரையாற்றினார். புதுச்சேரி அலைட்ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் இயக்குனர் பேராசிரியர் ஆண்ட்ரூஜான் குறிப்புரை வழங்கினார். சிறப்பு பேச்சாளர்களாக சென்னை சங்கரநேத்ராலயாகண் ஒளியியல் பிரிவின் ஆலோசக ர்டாக்டர் கிருஷ்ணகுமார் மற்றும் எலைட் கண்ணொலியியல் கல்லூரியின் பேராசிரியையும், சங்கரநேத்ராலயாவின் தொழிற்சார் கண் மருத்துவ சேவைகள் பிரிவின் தலைவருமான டாக்டர் ரஷிமா அசோகன் மற்றும் புதுச்சேரி அரசு மருத்துவமனையின் கண் நோய் பிரிவு நிபுணர் டாக்டர் தணிகாசலம் ஆகியோர் பங்கேற்று பல்வேறு தலைப்புகளின் கீழ் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான மருத்துவ பயிற்சி சார்ந்த செயல்முறை திறன் மேம்பாட்டு பயிற்சியானது கல்லூரியின் கண்ணொலியில் பிரிவு பேராசிரியர்கள் மூலம் நேரடி பயிற்சியாக நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த கண்ணொலியில் பிரிவு மாணவர்கள் கண் ஒளியியல் நிபுணர்கள், பேராசிரியர்கள் என பலர் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வினை முன்னிட்டு மாணவர்களுக்கான படவிளக்க காட்சி போட்டி, வினா விடை போட்டி மற்றும் ஆராய்ச்சி கட்டுரை சார்ந்த விளக்கக் காட்சி போன்றவை நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் படைப்புகளை சமர்ப்பித்தனர். இதில் சிறந்த படைப்புகளுக்கு பரிசுகளும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் புதுச்சேரி அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கண்ணொலியியல் பிரிவின் பொறுப்பாளர் வெண்ணிலா நன்றியுரை வழங்கினார். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ்சுடர், பேராசிரியை வெண்ணிலா மற்றும் உதவி பேராசிரியைபானு உட்பட இதர பிற உதவி பேராசிரியர்களும் சிறப்பாக செய்து இருந்தனர்.

# கலைஞர் கைவினைத் திட்ட தொடக்க விழா ஒளிபரப்பு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் கைவினைத் திட்டத்தினை தொடங்கி வைத்து பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய நிகழ்ச்சியின் நேரலை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பார்த்து பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

# சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்த அமைச்சர்




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், வடசின்னாரிபாளையம் ஊராட்சி, வீணம்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீணம்பாளையம் முதல் சுள்ளிபெருக்கிபாளையம் வரை சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்கள்.

# மூளை வளர்ச்சி வேறுபாடுகள் உள்ள குழந்தைகள், பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி




நெல்லை, ஏப். 20-

திருநெல்வேலி மாவட்டம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் மதி இறுக்கம் (மூளை வளர்ச்சி வேறுபாடுகள்) உள்ள குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக் கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டரங்கில் மதி இறுக்கம் (மூளை வளர்ச்சி வேறுபாடுகள்) உள்ள குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கான தேசிய நலவாழ்வு நலவ குழுமம் தமிழ்நாடு மூலம் மூல தயார் செய்யப்பட்டுள்ள மதி இறுக்கம் குழந்தைகளின் பெற்றோர்களுக்கான வழிகாட்டி கையேடினை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் வழங்கினார்கள்.

உலகமெங்கும் ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி ஆட்டிசம் விழிப்புணர்வு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது. நமது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையம் இயங்கி வருகிறது. இம்மையத்தில் பிறந்த குழந்தைகள் முதல் 18 வயது வரை உள்ளவர்களுக்கு சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ளவர்களுக்கு இருதய குறைபாடுகள் அன்னபிளவு, உதடு பிளவு குறைபாடுகள், நரம்பு சம்பந்தமான குறைபாடுகள், கண்புரை நோய், காது கேளாமை குறைபாடுகள், கண் விழித்திரை சம்பந்தமான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான சிகிச்சை முறைகள் அனைத்தும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே முற்றிலும் இலவசமாக செய்யப்படுகின்றது. இம்மையத்தில் Autism எனப்படும் (மதி இறுக்கம்) குழந்தைகளுக்கான மதி இறுக்கத்திற்கான சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றது. ஆட்டிசம் என்பது ஒரு நோய் அல்ல குறைபாடு. ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (Autism Spectrum Disorder ASD) என்பது குழந்தைகளின் நரம்பியல்வளர்ச்சி குறைபாடுகளின் தொகுப்பாகும். இந்த ஆட்டிசம் குறைபாடு மரபணு மற்றும் கர்ப்பகாலத்தில் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் மூலம் ஏற்படுவதாக மருத்துவ ஆராய்ச்சி நிரூபித்துள்ளது. 2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நாளில் உலகமெங்கும் ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மருத்துவ ஆராய்ச்சி கருத்தரங்குகள் நடக்கிறது.

மரபியல் வல்லுநர், நரம்பியல் நிபுணர், குழந்தை மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் பேச்சு சிகிச்சையாளர் கொண்ட ஒரு சிறப்பான குழுவின் மூலம் குழந் தையின் ஆரம்ப கட்டத்திலேயே ஆட்டிசத்தை அடையாளம் காணவும் சிறப்பு பயிற்சி, மருத்துவ சிகிச்சை அளிக்கவும் முடியும். நிச்சயமாக ஆரம்பகால சிறப்பு பயிற்சி மற்றும் சரியான மருத்துவ சிகிச்சை மூலம் ஆட்டிசம் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

ஆட்டிசம் உள்ள குழந்தைகள் அதீத அறிவாற்றல் திறன்கள் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் நம்மை விட கல்வி, கணிதம், இசை அல்லது பிற சிறப்புத் துறைகளில் சிறந்து விளங்க முடியும். உதாரணம்: ஐசக் நியுட்டன், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இன்னும் சில உலகறிந்த அறிவியல் மேதைகள். இவர்களும் ஆட்டிசம் குறைபா டுகளுடன் தான் இருந்தார்கள். அவர்களின் பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள், சுற்றத்தார் மற்றும் ஆசிரியர்கள் காட்டிய அன்பு அரவணைப்பு அவர்களை உலகம் புகழும் அறிஞர்காக மாற்றியது.

இப்போது நாம் செய்ய வேண்டியது ஆட்டிசம் உள்ள குழந்தைகளை மரபியல் ஆலோசனை பெறுவதன் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தை மேலும் பாதிப்பு அடையாமல் தடுப்பது எப்படி? எப்படி பராமரிப்பது? மற்றும் அடுத்த குழந்தை பாதிக்கப்படாமல் பாதுகாப்பது எப்படி என்று தெரிந்துகொள்ள வேண்டும் அதன்படி, அன்புடன் அரவணைத்து நடத்துவது, சிறப்பு பயிற்சி விடாமல் தருவது, தனிமை படுத்தாமல் இருப்பது, சத்தான உணவுகளை அதிகம் சாப்பிட செய்வது, மருத்துவர்கள் ஆலோசனை பெற்ற பின் மருந்துகள் கொடுப்பது, மூட நம்பிக்கைகளை கைவிடுவது, போலியான வதந்திகள் மற்றும் விளம்பரங்களை பார்த்து ஏமாறாமல் இருப்பது, இளம் வயதில் திருமணம் செய்யாமல் இருப்பது, சொந்தத்தில் திருமணம் செய்யாமல் இருப்பது போன்ற சிலவற்றை நம்மால் முடிந்தவரை கடைபிடித்து, மற்றவர்களுக்கும் சொல்வதன் மூலம் குறைபாடுள்ள குழந்தை பிறக்காமல் தடுக்க முடியும்.

இம்மையத்தில் இதுவரை 140 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கான சிகிச்சைகள் அனைத்தும் முதல்வரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் அனைவரும் பயன் பெறுகிறார்கள்.

இக்குழந்தைகளுக்காக பயிற்சி வழங்குவதற்காக சிறப்பு பூங்கா (Sensory Integration Park) இம்மையத்தோடு இணைந்து அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தினமும் இக்குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இங்கு அனைத்து விதமான சிகிச்சைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது. இங்கு அளிக்கப்படும் அனைத்து சிகிச்சை முறைகளும் அதற்கென்றே பயிற்சி பெற்ற திறமைமிக்க பயிற்சியாளர்களால் அளிக்கப்படுகின்றது.

மேலும் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்திலேயே நவீன ஸ்கேன் மூலம் கருவில் இருக்கும் குழந்தைகளுக்கு பிறவி குறைபாடுகள் கண்டறியும் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பிறவி குறைபாடு இருக்கும் பட்சத்தில், அதனை ஆரம்ப நிலையிலேயே சரி செய்ய சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், குழந்தை பருவத்தில் வரக்கூடிய ரத்த சோகை, ஊட்டச்சத்து குறைபாடு, தைராய்டு குறைபாடு போன்றவற்றையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை முற்றிலும் இலவசமாக செய்யபடுகிறது. மூளைவளர்ச்சி வேறுபாடுகள் உடைய குழந்தைகள் சிறு வயதில் கண்டுப்பிடிக்கப்பட்டால் சரி செய்திடலாம். குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் எந்த எந்த காலக்கட்டத்தில் போட வேண்டுமோ அவற்றை போட்டுக்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவ கல்லூரி மருத்துமனை முதல்வர் ரேவதி பாலன், மருத்துவர் எம்.சுப்பையா ஸ்ரீராம், மருத்துவ அலுவலர் வி.சௌந்திரராஜன், குழந்தைகள் மருத்துவ குழு தலைவர் மாணிக்க வாசகம், தமிழ்நாடு குழந்தைகள் மருத்துவ குழு உறுப்பினர் ராஜேஸ் மற்றும் மருத்துவர்கள், மருத்துவ மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

# அதிமுகவை கண்டித்து துண்டு பிரசுரங்கள் விநியோகம்



செஞ்சி, ஏப். 20–

ஒன்றிய பாஜக அரசுடன் கூட்டணி வைத்து தமிழகத்தில் நீட் தேர்வு கொண்டு வந்து பல மாணவர்கள் உயிர் இழந்ததற்கு காரணமாக அதிமுகவை கண்டித்தும், அதிமுக ஆட்சி காலத்தில் மின் கட்டணம் உயர்விற்கு காரணமான உதய் மின் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது, விவசாயி என்று கூறி விவசாயிகளை பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை நிறைவேற்றிட ஆதரவு தெரிவித்தது, சிறுபான்மைவினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சிஏஏ சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது போன்ற பல்வேறு துரோகங்களை மேற்கொண்ட அதிமுக எடப்பாடியின் நடவடிக்கையை பொது மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சியில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், நகர செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட கவுன்சிலர் அரங்கஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி உள்ளிட்ட திமுகவினர் செஞ்சி பேருந்து நிலையம், செஞ்சி காந்தி பஜார், கூட்ரோடு சென்று அதிமுகவின் துரோகத்தை எடுத்துரைத்தும் துண்டு பிரசங்கங்களையும் விநியோகித்தனர். இதில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தவளக்குப்பத்தில் ரூ.42 லட்சத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி: சபாநாயகர் செல்வம் தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, ஏப். 20–

புதுவை மணவெளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தவளக்குப்பம் வி.ஐ.பி., நகர், ராம்ஜி நகர், பூரணாங்குப்பம் வடக்கு வீதி ஆகிய பகுதிகளில் ரூ.42 லட்சத்தில் புதிய கருங்கல் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை சபாநாயகர் செல்வம் தொடங்கி வைத்தார்.

தவளக்குப்பம் கிராமத்தில் உள்ள வி.ஐ.பி., கார்டனுக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் கருங்கல் சாலை அமைக்கும் பணி, சடா நகர் பகுதியில் உள்ள ராம்ஜி நகருக்கு ரூ.7 லட்சம் மதிப்பில் கருங்கல் சாலை அமைக்கும் பணி மற்றும் பூரணாங்குப்பம் கிராமத்தில் உள்ள வடக்கு வீதிக்கு ரூ.25 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கும் பணிகளை தொடங்கும் வகையில் பணிகளுக்கான பூமி பூஜை சபாநாயகர் செல்வம் முன்னிலையில் அந்தந்த பகுதிகளில் நடந்தது.

நிகழ்ச்சியில் அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், உதவி பொறியாளர் நாகராஜ், இளநிலை பொறியாளர் சரஸ்வதி மற்றும் பாஜக விவசாய அணி பொதுச் செயலாளர் சக்தி பாலன், மாவட்ட தலைவர் சுகுமாரன், கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார், தட்சிணாமூர்த்தி, அங்காளம்மன், கோவில் நிர்வாக அதிகாரி பாஸ்கர், புத்துப்பட்டான், செல்வி, திருமால், பாலமுருகன், குணாளன், அய்யாசாமி, நாகப்பன், முருகேசன், புருஷோத்தமன், சக்திவேல், ராஜகுரு, குமரன் உள்ளிட்ட அப்பகுதி முக்கிய பிரமுகர்கள், ஏராளமான பெண்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் நகர ஒருங்கிணைந்த வர்த்தகர்கள் நல சங்க பொதுக்குழு கூட்டம்



திண்டுக்கல், ஏப். 20–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் நகர ஒருங்கிணைந்த வர்த்தகர்கள் நலச்சங்கம் தலைவர் பி.கே.சுப்பிரமணியன் தலைமையில் 23 ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் க.திருமலைசாமி கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். மேலும் இதனைத் தொடர்ந்து வர்த்தகர்கள் அணி சங்க நிர்வாகிகள் பலர் சங்கத்தின் விதிமுறைகளை குறித்து ஆலோசனைகள் வழங்கினர். மேலும் ஒட்டன்சத்திரத்தில் ஜீவநதியாக நங்காஞ்சிஆறு விளங்கி வருகிறது. இதனால் விவசாயிகள், கால்நடைகள், பொதுமக்களின் குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வரும் இந்த நங்கஞ்சி ஆற்றில் கழிவுநீர் கலக்கப்படுவதால் வாழ்வாதாரமாக விளங்கும் நங்காஞ்சி ஆறு தற்போது கழிவுநீர் நதியாக மாறிவிட்டது. எனவே நங்காஞ்சி ஆற்றினை தூய்மைப்படுத்த அனைத்து துறை அதிகாரிகளுக்கும் மனு கொடுக்க வேண்டும் எனவும், நெகிழி பயன்பாட்டை தவிர்ப்பது, பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாத படி, கடைகள் முன்பு சாலை ஆக்கிரமிப்பு செய்யாமல் வியாபாரம் செய்ய வேண்டும் எனவும், பொதுமக்கள் ஆன்லைனில் பொருட்கள் வணிகம் செய்வதை தவிர்த்து ஒட்டன்சத்திரம் பகுதிவால் பொதுமக்கள் கடை வியாபாரிகளிடம் நேரில் சென்று பொருட்கள் வாங்க பொதுமக்களை அறிவுறுத்த வேண்டுமெனவும் பல்வேறு தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது.

இந்த பொதுக்குழு கூட்டத்தில் செயல் தலைவர் வஞ்சிமுத்து, செயலாளர் தணிகாசலம், பொருளாளர் முகமது மீரான், செய்தி தொடர்பாளர் பழனி குமார், நிர்வாக குழு உறுப்பினர்கள் கௌரவத் தலைவர், கௌரவ ஆலோசகர், இணைச் செயலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானல் ஊராட்சி பகுதியில் வளர்ச்சி திட்டப் பணிகளை ஆட்சியர் ஆய்வு



திண்டுக்கல், ஏப். 20–

திண்டுக்கல் மாவட்டம், கொடைக் கானல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம். காமனூர் ஊராட்சியில் மங்களம்கொம்பு கிராமத்தில் ரூ.30.10 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டுமான பணிகள், எம்ஜிஆர் நகரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் கீழ் ரூ.16.76 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு தானிய கிட்டங்கி அமைக்கும் பணிகள் மற்றும் காமனூரில் ரூ.33.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டு பணிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தாண்டிக்குடி ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் கடுகுதடிப்புதூர் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ரூ.17.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய அங்கன்வாடி மைய கட்டடம் கட்டுமாணப் பணிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கண்டார்.

பின்னர் அடுக்கம் ஊராட்சியில், பெருமாள்மலை கிராமத்தில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் குப்பைகள் தரம் பிரிக்கும் கூடாரம் கட்டுமானப் பணிகள் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடுகள் கட்டுமான பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, கொடைக்கானலில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதிகியக்ஸ் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன்பின்னர், தாண்டிக்குடி காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் கோடை விடுமுறையை முன்னிட்டு கொடைக்கானலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து வாகன போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நிறுத்துமிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# கோவை மாநகர காவல் துறை ஆண்டு பவள விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி



கோவை, ஏப். 20–

கோவை மாநகர காவல் துறையின் 35ஆம் ஆண்டு பவள விழாவை முன்னிட்டு போதையில்லா கோவை உருவாக்கும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி, சைக்கிளிங், காவலர்களுக்கான போட்டிகள் மற்றும் கிரிக்கெட் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர் தலைமையில் நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு பகுதியாக குனியமுத்தூர் காவல்நிலையம் எல்லைக்குட்பட்ட கோவைப் புதூர் ஏ மைதானத்தில் போதையில்லா கோவை விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டிகள் மாநகர காவல் தெற்கு உதவி ஆணையர் அஜய் தங்கம் தலைமையில் நடைபெற்றது. கிரிக்கெட் போட்டிகளில் காவல்துறையை சேர்ந்த அணிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மொத்தம் 12 அணிகள் பங்கேற்றன.

இதுகுறித்து குனியமுத்தூர் காவல் நிலையம் சார்பில் தெரிவிக்கையில், கோவை மாநகர காவல் உருவாகி 35 ஆண்டுகள் ஆகின்றன. எனவே இந்த பவள விழாவினை கொண்டாடும் வகையிலும் அதே சமயத்தில் போதையில் லா கோவை உருவாக்கும் நோக்கிலும் மாநகர் காவல் ஆணையரின் உத்தரவின் பேரில் இந்த கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 32 அணிகள் பங்கேற்கின்றன. இந்த மைதானத்தில் 12 அணிகளும் வேளாண் பல்கலைக்கழகம் மைதானத்தில் மீதமுள்ள அணிகள் பங்கேற்றனர். நாக் அவுட் முறையில் நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு விழா நிறைவு நாளில் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று காவல்நிலையம் சார்பில் தெரிவித்தனர் காலையில் துவங்கிய கிரிக்கெட் போட்டியினை தெற்கு உதவி ஆணையர் அஜய் தங்கம் போட்டிகளை துவக்கி வைத்தார். உடன் குனியமுத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் பாஸ்கரன், கரும்புகடை காவல் நிலைய ஆய்வாளர் தங்கம், செல்வபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அழகுராஜ் மற்றும் உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், காவலர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# சாலபுத்தூர் ஏரியை சீரமைக்கும் பணியை மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



செஞ்சி, ஏப். 20–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில் சாலபுத்தூர் ஏரி உள்ளது இந்த ஏரியை சீரமைத்து தர கோரி அப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையை ஏற்று சாலபுத்தூர் ஏரியை சீரமைக்க நீர்வளத்துறை சார்பில் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்பதற்கு பூமி பூஜை விழா சாலபுதூர் ஏரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் ரமேஷ் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சாலபுத்தூர் ஏரியை சீரமைப்பு செய்வதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் நீர்வளத்துறை உதவி பொறியாளர்கள் தெரேசா, ரமேஷ் கண்ணா, ஒன்றிய கவுன்சிலர் முரளி, காமகரம் ஊராட்சி மன்ற தலைவர் சக்கரவர்த்தி, ஒன்றிய பிரதிநிதிகள் கதிரவன், கோடீஸ்வரன், அய்யாதுரை, ஏரி நீர் பாசன சங்க தலைவர் தேவராஜன், நந்தன் கால்வாய் தலைவர் தாமோதரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் செஞ்சி தொண்டரணி பாஷா, உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# தடையை மீறி மீன் பிடித்தால் நிவாரணம் நிறுத்தப்படும்

## மீன்வளத்துறை எச்சரிக்கை

புதுச்சேரி, ஏப். 20–

புதுச்சேரி மாநிலத்தில் தடையை மீறி மீன்பிடித்தால் தடைக்கால நிவாரணம் நிறுத்தப்படும் என, மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மீன்வளத்துறை இயக்குநர் முகமது இஸ்மாயில் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், புதுச்சேரியில் ஏப்ரல் 15ம் தேதி முதல் ஜூன் மாதம் 14ம் தேதி வரையிலான 61 நாட்களுக்கு கனகசெட்டிக்குளம் மீனவ கிராமம் முதல் மூர்த்திக்குப்பம் புதுகுப்பம் மீனவ கிராமம் வரையில் தடைக்காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பாரம்பரிய மீன்பிடி படகுகளான கட்டுமரம், நாட்டு படகுகளை தவிர அனைத்து வகை படகுகள் குறிப்பாக இழுவலை கொண்டு விசைபடகில் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், இயந்திரம் பொருத்திய பைபர் படகில் மீன்பிடிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற சூழ்நிலையில், ஒரு மீனவ கிராமத்திலிருந்து பைபர் படகில், கடலில் மீன் பிடித்தொழிலில், தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக துறைக்கு புகார்கள் வருகிறது. இதன் காரணமாக, மற்ற கிராம மீனவர்களிடையே பதற்றமான சூழல் ஏற்படுகிறது.

எனவே, அனைத்து மீனவ கிராம பஞ்சாயத்தார், மக்கள் குழு, கோவில் நிர்வாக குழுவை சேர்ந்தவர்கள், புதுச்சேரி அரசால் வெளியிடப்பட்டுள்ள மீன்பிடி தடைக்கால ஆணையை தவறாது பின்பற்ற வேண்டும்.

தங்களது கிராமத்தை சேர்ந்த இயந்திரம் பொருத்திய பைபர் படகில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு தெரியப்படுத்தி மீன்பிடிப்பில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். எச்சரிக்கையை மீறி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு மீன்வளத் துறையால் வழங்கப்படும் மீன்பிடி தடைக்கால நிவாரணம் நிறுத்தப்படும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஆலங்குடி, வல்லத்திராக்கோட்டை பகுதியில் மரக்கன்று நடும் விழா



புதுக்கோட்டை, ஏப். 20–

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார் உத்தரவின் பேரில் புதுக்கோட்டை மாவட்ட நீதிபதி மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு தலைவர் ஆணைக்கிணங்க ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரம் நடுவிழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் வட்ட சட்டை பணிகள் குழு தலைவர் அ.விஜயபாரதி தலைமையில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பல வகையான மரக்கன்றுகளை நடவு செய்தார்.

நிகழ்வில் திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில்குமார், ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் உடற்கல்வி ஆசிரியர் குழந்தைவேல் சமூக ஆர்வலர் செந்தில்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அதேபோல் வல்லத்திராக் கோட்டை ராமச்சந்திரா ஊரணி அருகில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. விழாவில் ஆலங்குடி உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் வட்ட சட்டப் பணி குழு தலைவர் நீதிபதி அ.விஜய பாரதி கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடவு செய்தார். நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஊராட்சி செயலாளர் ஹரி உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடவு செய்தனர். ஆலங்குடி காவல் சரக மண்டலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டது.

# ஆலங்குடி அரசு மருத்துவமனையில் தீயணைப்பு ஒத்திகை நிகழ்ச்சி



புதுக்கோட்டை, ஏப். 20–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மருத்துவ மனையில் தீயணைப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது, இதற்கு, தலைமை மருத்துவர் மு. பெரியசாமி தலைமை தாங்கினார். ஆலங்குடி தீயணைப்பு அலுவலர் குழந்தைராஜ் முன்னிலையில், தலைமை காவலர் இளவரசன் தீயணைப்பு ஒத்திகை செய்முறைகளை செய்து காண்பித்தார். இதில் காயம்பட்டவர்களை படுத்தநிலையில் தூக்கி செல்லுதல், இருவர் சேர்ந்து கைகளில் பாதுகாப்பாக தூக்கி செல்லுதல், தீ பற்றிய பிறகு ஈரத்துணிகொண்டு அனைக்கும் முறைகள். மருத்துவமனையில் தீ பற்றினால் தீயணைப்பான் கொண்டு அனைக்கும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. தீயணைப்பு உதவிக்கு 101 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு சேவையை பெறலாம் என்று கூறினார். இதைத்தொடர்ந்து தனது தலைமை உரையில் டாக்டர் மு.பெரியசாமி, கோடையில் தீயினால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமா இருக்கும்.கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் சுமார் 3000க்கும் மேற்பட்ட தீ விபத்துகளும், 6000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளது. மருத்துவ மனைகளில் ஏற்பட்டால் அதன் பாதிப்புகள் அதிகமா இருக்கும். ஆகவே தீயணைப்பு பற்றி தெரிந்துகொள்வது ஓர் உயிர் காக்கும் செயல் ஆகும் என்றும் இதை அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று கூறினார். இதில் தீயணைப்புத்துறை காவலர்கள், மருத்துவர்கள் அழகப்பன சுபா, மணிவண்ணன், கீதா செவியர்கள் வேலுமணி, செல்வகுமாரி, சசி ரேகா, கலைச்செல்வி, ஜான், சந்தியா, மருந்தாளுநர் சிவசங்கரி,கணேஷ், சந்தோஷ், மீனாட்சி மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். டாக்டர் லதா நன்றி கூறினார்.

# நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க சிஆர்பிஎப் வீரர்கள் மகத்தான தியாகத்தைச் செய்துள்ளனர்- அமித்ஷா பேச்சு



சென்னை, ஏப். 20–

மத்திய உள்துறை அமைச்சரும் மூத்த பாஜக தலைவருமான அமித்ஷா, 86வது சிஆர்பிஎப் எழுச்சி தின அணிவகுப்பில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு, பணியின்போது உயிரிழந்த 2,264 பாதுகாப்புப் படையினரின் தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தி பேசுகையில், “மிகவும் பயங்கரமான நக்சலைட்டுகள் கூட சிஆர்பிஎப் இன் கோப்ரா பட்டாலியனைப் பார்த்து நடுங்குகிறார்கள்” என்று பாராட்டி பேசினார்.

முன்பு பசுபதிநாத் காடு முதல் திருப்பதி வரை நக்சலைட்டுகளின் ஆதிக்கம் பரவியிருந்தது. தற்போது பிரதமர் நரேந்திர மோடியின் திறமையான தலைமை மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் துல்லியமான உத்திகள் காரணமாக, நக்சலைட்டுகளின் செயல்பாடுகள் இப்போது நான்கு மாவட்டங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிஆர்பிஎப் படைவீரர்களின் சீரிய முயற்சிகள் மூலம் நக்ஸலைட்டுகளின் செயல்பாடுகள் வரும் 2026ம் ஆண்டு மார்ச் 31க்குள் முற்றிலுமாக நாட்டில் இருந்து ஒழிக்கப்படும் என்று அவர் உறுதி தெரிவித்தார்.

சமீப காலங்களில் மோடி மற்றும் அமித்ஷா இருவரும் இந்தியாவின் உள் மற்றும் எல்லைப் பாதுகாப்பை எவ்வாறு மறுவரையறை செய்துள்ளனர். ஒருபுறம், பயங்கரவாதத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கை உள்ளது; மறுபுறம், வளர்ச்சி மக்களின் வாழ்க்கையில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்கிறது, இந்த சமநிலை உண்மையான தலைமையின் அடையாளமாகும். பாதுகாப்பு முன்னணியில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை மற்றும் குடிமக்களுக்கு வளர்ச்சிக்கான பாதைகளைத் திறப்பது என அமித்ஷாவின் உத்தி எப்போதும் தெளிவாக உள்ளது.

நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க சிஆர்பிஎப் வீரர்கள் செய்த உயர்ந்த தியாகத்தை மக்கள் எப்போதும் மறக்கமுடியாது. ஒரு காலத்தில் காவல்துறை கூட செல்ல தயங்கிய பகுதிகளில் கூட தற்போது பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சாலைகள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. ஸ்வச் பாரத், ஹர் கர் திரங்கா, ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத், ஸ்வச்தா ஹி சேவா, மற்றும் ஏக் பெட் மா கே நாம் போன்ற பிரச்சாரங்கள் மூலம், சிஆர்பிஎப் தேசத்திற்கும் சமூகத்திற்கும் அதன் விழிப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பை திறம்பட நிரூபித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் 370வது பிரிவு ரத்து செய்யப்பட்டதன் மூலமும், நக்சலிசத்திற்கு எதிரான தீவிர உத்திகளின் மூலமும், இந்திய அரசியலின் சாணக்கியர் என்று அடிக்கடி புகழப்படும் அமித்ஷா, நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான எந்தவொரு முடிவையும் எடுப்பதில் தயங்குவதில்லை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார். நக்சலிசத்திற்கு எதிரான போராட்டம் இப்போது ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது, மேலும் இந்தப் போரின் தளபதியாக அமித்ஷாவின் பங்கு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் நினைவுகூரப்படும்.

# தமிழில் கோப்புகளை கையாள அரசாணை ஒய்வு பெற்ற அலுவலர் சங்கம் முதல்வருக்கு நன்றி



கடலூர், ஏப். 20–

தமிழ்நாடு அரசு அனைத்து கோப்புகளையும் தமிழிலேயே கையாள வேண்டும் என்று அரசாணை வெளியிட்டுள்ளதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் கடலூர் மாவட்ட பிரச்சார செயலாளர் கவிஞர் ம.ரா. சிங்காரம் நன்றி தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் நான் சார்ந்திருந்த மருத்துவத்துறை அமைச்சுப் பணியாளர் செயல் திறன் கூட்டு இயக்கத்தின்( ஜாஸ்மின்ஸ்) சார்பில் அனைத்து அரசாணைகளையும் தமிழில் வெளியிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, அப்போதைய முதல்வருக்கு கடிதம் அனுப்பி இருந்தோம், அதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசாணை வெளியிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது, என்று ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம் நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே மத்திய அரசு அறிவித்துள்ளது போல் மாநில அரசு பணியாளர்கள், ஆசிரியர்களுக்கு இரண்டு சதவிகித அகவிலைப் படியை கடந்த ஜனவரி 2025 முதல் ரொக்கமாக வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சரை கேட்டுக்கொள்கிறோம் என்று கவிஞர் ம. ரா. சிங்காரம் தெரிவித்தார்.

# அண்ணாமலைப் பல்கலைகழகத்தின் வேளாண்புலத்தில் கல்லூரி நாள் விழா




சிதம்பரம், ஏப். 20–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் புலம் சாஸ்திரி அரங்கில் வருடாந்திர கல்லூரி நாள் விழாவான

கிஸிஜிலிமிஜிறிலிகிசீ 25ஐ நடத்தியது. இந்த நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு திறமைகளும், சாதனைகளும் வெளிப்படுத்தப்பட்டன. விழா பாரம்பரிய தமிழ் வாழ்த்துடன் தொடங்கி, வேளாண் பொருளாதாரத் துறையின் பேராசிரியரும் தலைவருமான மற்றும் வேளாண் சங்கத்தின் துணைத் தலைவருமான முனைவர் ஆர். வெங்கடராமன் வரவேற்புரை வழங்கினார். விழாவின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் சிறப்பு விருந்தினர்களும் மாணவர் பிரதிநிதிகளும் இணைந்து குத்துவிளக்கு ஏற்றினர்.

வேளாண்மைப் புலத்தின் முதல்வரும் வேளாண் சங்கத்தின் தலைவருமான முனைவர் ஏ. அங்கயர்கண்ணி விழாவிற்குத் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்தினார். மாணவர்களின் பன்முக திறமைகளையும், கல்விச் சாதனைகளையும் பாராட்டிய அவர், பல்வேறு துறைகளில் அவர்களின் பெருமைக்குரிய செயல்பாட்டை சுட்டிக்காட்டி பெருமைபடுத்தினார். தொடர்ந்து மாணவ மாணவியரை வாழ்வில் முன்னேறி செல்ல ஊக்குவித்த அவர், “இன்னும் பயணிக்க வேண்டிய தூரம் அதிகம்“ என்ற பாடலை குறிப்பிட்டு, பெரிய சாதனைகளை நோக்கிய நீண்ட பாதையை வெற்றிகரமாக கடக்க வாழ்த்தினார்.

இந்த கல்வியாண்டில் வேளாண்மைப் புலம் மற்றும் வேளாண் சங்கத்தின் முக்கிய செயல்பாடுகளையும், மைல்கற்களையும் விவரிக்கும் ஆண்டறிக்கையை இறுதியாண்டு பி.எஸ்சி. (ஹான்ஸ்) தோட்டக்கலை மாணவியும், சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஞான அச்சயா தொகுத்து வழங்கினார்.

கலைப் புலத்தின் முதல்வர் முனைவர் கே. விஜயராணி உற்சாகமூட்டும் கல்லூரி நாள் உரையை வழங்கினார். வாழ்க்கை அளிக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் ஏற்றுக்கொள்ள, சுய நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள, தன்முனைப்பான அணுகுமுறையை கடைப்பிடிக்க மற்றும் தளராத உறுதியுடன் முயற்சிக்க மாணவர்களை அவர் தன் உவமை செறிந்த உரையால் ஊக்குவித்தார்.

சிறப்புரையை சென்னையைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளரும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக இயக்குநருமான முனைவர் கே.சி. ரவிச்சந்திரன் வழங்கினார். வேளாண் பட்டதாரிகளுக்கு உள்ள பரந்த வேலைவாய்ப்புகளை அவர் எடுத்துரைத்தார், குறிப்பாக குடிமைப் பணிகள், வங்கித்துறை மற்றும் கூட்டுறவுத் துறையில் உள்ள வாய்ப்புகளை சுட்டிக்காட்டினார். வேளாண் பொருளாதாரம் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் தலா ஒரு முதுகலைப் பட்டதாரிக்கு மாநில கூட்டுறவுத் துறையிலிருந்து உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். வள்ளலாரின் தத்துவம் மற்றும் கூட்டுறவு இயக்கத்திலிருந்து உத்வேகம் பெற்ற முனைவர் ரவிச்சந்திரன், மாநில கூட்டுறவு சமூகங்களில் வேளாண் பட்டதாரிகளை பணியமர்த்துவதற்கு தேவையான முயற்சிகளை செய்வதாக தெரிவித்தார். வெற்றி பெறுவதற்கு நோக்கம், உற்சாகம், கடின உழைப்பு, அறிவு, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் நேர்மறையான சிந்தனை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், உடனடி திருப்தியை நாடுவதைத் தவிர்க்க எச்சரித்தார்.

இந்த விழாவின் சிறப்பு தருணமாக 2019ல் பி.எஸ்சி. வேளாண்மை முடித்த, வேளாண்புலத்தின் முன்னாள் மாணவி கதிர்செல்வி பாராட்டப்பட்டார். குரூப் I TNPSC தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பெற்ற அவரது சாதனை கொண்டாடப்பட்டது. கூட்டத்தை உரையாற்றிய கதிர்செல்வி, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற விரும்பும் விண்ணப்ப தாரர்களுக்கு மதிப்புமிக்க குறிப்புகளையும் நுண்ணறி வுகளையும் வழங்கி ஊக்கமளித்தார்.

பல்வேறு கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சார போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களும் ஆசிரியர்களும் அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட பரிசளிப்பு விழாவுடன் நிகழ்வு நிறைவடைந்தது. வேளாண் பொருளாதாரத் துறையின் உதவிப் பேராசிரியரும் இந்த கலாச்சார நிகழ்சிகளின் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் ஆர். செல்வகுமார் நன்றியுரை வழங்கி, வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இறுதியாக மாணவ, மாணவியரின் கண்கவர் நிகழ்ச்சிகளைக் கொண்ட உற்சாகமான கலாச்சார நிகழ்ச்சி நடைபெற்றது.

# கோவில்பட்டி மாணவி தேசிய அளவிலான கைப்பந்து போட்டிகளில் பங்கேற்க தேர்வு



**தூத்துக்குடி, ஏப். 20–**

கோவில்பட்டி மாணவி வித்யா தேசிய அளவில் போட்டிகளில் ஈடுபட தேர்வு செய்யப் பட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்டம் சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் வைத்து தமிழ்நாடு கைப்பந்து சங்கத்தின் சார்பில் சப் ஜூனியர் மாணவிகளுக்கு தமிழ்நாடு கைப்பந்து அணிக்கான தேர்வு நடைபெற்றது.

இதில் நம் பள்ளியின் சார்பாக 6 மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் இலக்குமி ஆலை பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவி S.சர்மிளா தேவி தமிழ்நாடு கைப்பந்து அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் ஏப்ரல் 30 ஆம் தேதி முதல் மே 4ஆம் தேதி வரை கர்நாடக மாநிலம் மாண்டியாவில் வைத்து நடைபெற உள்ள தேசிய கைப்பந்து சாம்பியன் சிப் போட்டியில் தமிழ்நாடு அணிக்காக இரண்டாவது முறையாக விளையாட உள்ளார்.

இலக்குமி ஆலை பள்ளி நிர்வாகத்திற்கும், உடற்கல்வி ஆசிரியர், பயிற்சியாளர் அவர்களுக்கும் பெற்றோர் ஆகிய எங்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்தனர்.

# காவல் நிலையத்தில் குடிநீர் தொட்டி திறப்பு



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளர் மைக்கல் இருதயராஜ் தலைமையில் கோடை காலத்தை முன்னிட்டு காவல் நிலையத்திற்கு வருகின்ற பொதுமக்களுக்கு குடிநீர் தொட்டி அமைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கினர்.

# Rajasthan's Royal collapse: Needed 25 off 18 balls, Rahul Dravid's side falters at finish line again





**New Delhi, April 20-**

Nine runs needed from six balls. That was the equation for the Rajasthan Royals in their last two matches. At Kotla, a few days ago, they came undone by Mitch Starc's fine last over, albeit still managing to force a Super Over and losing in the tiebreaker. In Jaipur on Saturday, they come undone even worse. Chasing 181, RR fell short by 2 runs against Lucknow Super Giants to suffer their sixth defeat of the season and remain rooted to the bottom half of the table.

When 25 runs were needed off 18 balls, and Yashasvi Jaiswal was still batting at 74, RR were in cruise control. Avesh Khan's night till then had not gone well; he had conceded 26 runs off his first two overs, but with the first ball of the 18th over, he fired in a full delivery, zoning in on the middle stump. Jaiswal, who had batted like a dream for most of the night, lost his shape, and the middle stump flew off the ground. It was the first sign of another RR late collapse. Later in the over, stand-in captain Riyan Parag went for a scoop behind the wickets – per se, not the worst idea because Avesh was constantly trying to bowl the fuller length balls – but he too lost his shape far too much, fell over to the offside and saw the ball crash into the stumps. He reviewed it, but he already knew the result as he walked off while the review system confirmed the obvious. Shimron Hetmyer has been retained by RR for his abilities at the death overs, and he hit a couple of fours off Prince Yadav in the 19th. Then he fell off the third ball of the last over, flicked a full ball straight to Shardul Thakur at short fine leg, a gift to LSG. Despite a late dropped catch by David Miller, Avesh held his nerve off the last ball to seal the win for LSG… and later quipped he wants to be the best version of Avesh Khan, and not be Mitchell Starc, when asked about the comparison.

For Parag and RR, it was another forgettable night. "Really kind of hard to process all the emotions right now. I don't know what we did wrong. I felt we were in the game probably till the 18th over and even the 19th over actually. But yeah, I don't know. It's tough. I blame myself for this. I probably should have finished it in the 19th over, but then I don't know if that was a bad decision from myself," Parag said after the match, the tone of the interview not dissimilar from Sanju Samson's after the defeat against DC the other night.

"My word, what the hell was that!" Shane Watson, who has seen his fair share of IPL cricket in multiple roles, couldn't contain the excitement. Off the first ball he faced on debut, Vaibhav smashed Shardul Thakur for a lofted six over the offside. It was in the slot, alright, not the most difficult delivery he would have faced. Mind you, he has already faced Jofra Archer in the nets, the video of which Rajasthan Royals had shared a few days earlier, and the teenager was swinging through the lines freely after copping an early bouncer. But this was the real deal. And he swung through the line of the ball once again, generating immense power through the batswing, not losing his shape in an attempt to muscle the ball. "One of the hardest shots in cricket is to gain power over cover of the front foot, and he says have some of that Shardul Thakur. What was that! Power to burn from the 14-year-old," Watson added.

As any nervous teenager would, Vaibhav was edgy at times. He was setting off for non-existent runs and cutting close while returning to the crease. There was one ugly hoick that was grassed by multiple converging fielders and trickled to the fence for four. But overall, his 20-ball 34 will be talked about for a while to come.

Rishabh Pant's gamble to bat first looked to be quite a serious one as LSG lost the red-hot Mitch Marsh and Nicholas Pooran within the powerplay. Pant's own woeful form continued as he fell for a bizarre 9-ball 3, attempting a reverse scoop and getting caught behind. The three early wickets prompted LSG to use the Impact Sub early as Ayush Badoni was brought in to handle the crisis, and he did just that with Aiden Markram for company. But RR kept things largely tight towards the backend, with LSG losing the set batters at the wrong time to be 153/5 after 19 overs. The most impactful over of the night would turn out to be the 20th as Abdul Samad – shining in his role as the finisher for LSG – smashed Sandeep Sharma for four sixes to plunder 27 runs off the last over. In the final equation, that made all the difference.

Brief scores: LSG 180/5 (Aiden Markram 66, Ayush Badoni 50, Wanindu Hasaranga 2/31) beat RR 178/5 (Yashasvi Jaiswal 74, Avesh Khan 3/37) by 2 runs.

# வம்பாகீரப்பாளையம் அரசு பள்ளியில் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி




**புதுச்சேரி, ஏப். 20–**

தமிழ்த் தென்றல் திரு.வி.க மற்றும் வீரமாமுனிவர் அரசு பள்ளியைச் சார்ந்த மாணவர்கள் வம்பா கீரப்பாளையம் தட்சிணாமூர்த்தி அரசு பள்ளி மாணவர்களுடன் கல்வி, கலை, கலாச்சாரம் ஆகிய வற்றைப் பகிர்ந்து கொள்வதற்காக மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை திரு.வி.க பள்ளியின் தலைமையாசிரியர் ரவிச்சந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஆசிரியர் சுபத்ரா தேவி, பாபு ஆகியோர் வழிகாட்டி ஆசிரியராக கலந்து கொண்டு மாணவர்களை வழி நடத்தினர்.

ஆசிரியை நளினி தொகுத்து வழங்க ஆசிரியை லலிதா பிரிய தர்ஷினி வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியில் யோகா, இயற்கையைப் பாதுகாப்போம் தலைப்பில் பொம்மலாட்டம், இசைக் கருவிகள் வாசித்தல், பாடல், நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. தலைமையாசிரியர் வேளாங்கன்னி, ஆசிரியர் செங்கதிர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தலைமையாசிரியர்கள் மாணிக்க வாசகம் மற்றும் விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். பொறுப்பாசிரியர் முருகையன் கருத்துரை வழங்கினார். இறுதியாக மாணவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியாக பொறுப்பாசிரியர் அஸ்ரப் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரிய, ஆசிரியைகள் செய்திருந்தனர்.

# ராணுவத்தில் அக்னி வீரராக வாய்ப்பு புதுச்சேரியில் 22ம் தேதி சிறப்பு முகாம்

## கலெக்டர் குலோத்துங்கன் தகவல்



**புதுச்சேரி, ஏப். 20–**

ராணுவத்தில் அக்னி வீரராக சேரும் திட்டத்தில் ஆட்தேர்வுக்கு விண்ணப்பிக்க சிறப்பு முகாம் புதுச்சேரியில் நடைபெறுகிறது.

புதுச்சேரி மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன், இதுகுறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, அக்னிபாத் திட்டத்தின் கீழ் இந்திய ராணுவத்தில் பொதுப்பணி, தொழில் நுட்பப்பணி, எழுத்தர், பண்டக காப்பாளர், டிரேட்ஸ்மேன் உள்ளிட்ட பிரிவுகளில் சேர சுமார் 25 ஆயிரம் காலிப் பணியிடங்கள் உள்ளன. இதற்கு விண்ணப்பிப்பதற்கு ஏப்ரல் 10ந் தேதி கடைசி தேதி என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் இளைஞர்களின் நலன் கருதி விண்ணப்பிப்பதற் கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதாவது விண்ணப்பிக்க இம்மாதம் வருகிற 25ந்தேதி (வெள்ளிக்கிழமை) வரை கடைசி நாளாகும்.

அக்னிபாத் திட்டத்தின் கீழ் அக்னிவீர் ஆட்தேர்வுக்கு புதுச்சேரி பகுதியை சேர்ந்த இளைஞர்கள், இளம்பெண்கள் விண்ணப்பிக்கலாம். புதுச்சேரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து தகுதியான இளைஞர்களும் அக்னி வீர் திட்டத்தில் இணையும் வகையில் இணையதளத்தில் பதிவு செய்வது மற்றும் அக்னிபாத் திட்ட விழிப்புணர்வு முகாம் 22.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தாகூர் கலைக் கல்லூரியில் நடைபெற உள்ளன. மேலும் வரும் 25ம் தேதி வரை அந்தந்த பள்ளி கல்லூரிகளிலும் விண்ணப்பிக்கும் முகாம் நடைபெற உள்ளன.

புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்த தகுதி வாய்ந்த நபர்கள் அக்னிவீர் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார். விண்ணப்பிக்க தேவையான ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட செயலில் உள்ள கைபேசி எண், மின் அஞ்சல் முகவரி, பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை, எஸ்.எஸ். எல்.சி., பிளஸ் 2 மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், விளையாட்டு மற்றும் என். சி.சி. சான்றிதழ்களை கொண்டு வர வேண்டும். மேலும், கூடுதல் விவரங்களுக்கு (www.joinindianarmy.nic.in) என்ற இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வில் உயிர் நீத்த 22 மாணவர்களுக்கு அதிமுக மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி




**விழுப்புரம், ஏப். 20–**

விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் விழுப்புரம் மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் நீட் தேர்வினால் உயிர் நீத்த 22 மாணவ, மாணவிகளுக்கு கண்ணீர் அஞ்சலி கூட்டம் முன்னாள் அமைச்சர், மாவட்டச் செயலாளர் சி.வி சண்முகம் எம்பி தலைமையில் நடந்தது. இதில் 500க்கும் மேற்பட்ட அதிமுகவினர் கருப்புச்சட்டை அணிந்து தங்கள் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

இக்கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமசந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் சக்கரபாணி, அர்ஜுனன், மாவட்ட மாணவரணி செயலாளர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் பேட்டை முருகன், சுரேஷ் பாபு, ராமதாஸ், கண்ணன், நகர செயலாளர்கள் ராமதாஸ், பசுபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசி வட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சேவைகள் குறித்து ஆட்சியர் கள ஆய்வு



**தென்காசி, ஏப். 20-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உங்களைத்தேடி, உங்கள் ஊரில் என்ற திட்டத்தை அறிவித்து அதில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் இனி ஒவ்வொரு மாதமும் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டத்தில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளை கேட்டறிந்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும். தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் ள் தென்காசி வட்டத்தில் நேற்று பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்து பல்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

தென்காசி வட்டம் இலஞ்சி பேரூராட்சி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் குற்றாலம் நகரியர் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம் குறித்தும், இலஞ்சி பேரூராட்சிக்குட்பட்ட முதலியார் குடியிருப்பு மற்றும் தென்றல் நகர் பகுதியில் குடிநீர் தொட்டி அமைக்கும் பணிகளை பார்வையிட்டும் அடிப்படை வசதிகளான தெருவிளக்கு வசதி, மற்றும் குடிநீர் வசதி, சாலை வசதிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கீழப்பாவூர் பெரிய குளத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், ஆயிரப்பேரி ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மை யினையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், பாட்டபத்து ஊராட்சியில், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கோப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், தொடக்கப்பள்ளியினை பார்வையிட்டு அடிப்படை வசதி, மாணவ, மாணவியர்களின் கல்வித்தரம் மற்றும் காலை உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், தெருவிளக்குகள் சரியாக எரிகிறதா எனவும் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு சரியான முறையில் குடிநீர் வழங்குவதற்கும் உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பொதுமக்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடி அவர்களின் குறைகளை கேட்டறிந்து விரைவில் அனைத்து குறைகளும் நிறைவேற்றப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா, தென்காசி வட்டாட்சியர் மணிகண்டன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் கூட்டம்



**கன்னியாகுமரி, ஏப். 20-**

கன்னியாகுமரி மாவட்டத்திற் குட்பட்ட அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு முடித்த மாணவ மாணவியரை மேற்படிப்பில் சேர்ப்பதற்கு சரியான வழிகாட்டுதல்கள் வழங்குவதற்காக பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா கலந்துகொண்டு தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவதோடு அவர்கள் மேற்படிப்பு பயில்வதற்காக வழிகாட்டுதல் முகாம்கள் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள அனைத்து குமரி மாவட்ட மாணவ,மாணவியரையும் உயர்கல்விகளில் 100% சேர்ப்பதில் தலைமை ஆசிரியரின் பங்கு மகத்தானது என்ற நோக்கத்தின் அடிப்படையில் இக்கூட்டமானது நடத்தபடுகிறது. இக்கூட்டத்தில் அனைத்து அரசு உதவி பெறும் மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளை சார்ந்த 243 தலைமை ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

அனைத்து மாணவர்களையும் 100% உயர்கல்வியில் சேர்த்து அவர்கள் வாழ்வை ஒளிபெற செய்ய வேண்டும் என்தே இக்கூட்டத்தின் நோக்கமாகும். அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இட ஒதுக்கீட்டில் உயர்கல்வி பயில இட ஒதுக்கீடு பெறும் அனைத்து மாணவர்களையும் முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்த்துடுவது என்பது நமது தலையாய கடமையாகும். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த வருடம் அதிகப்படியான மாணவர்கள் முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்த்திட அனைத்து வகை வழிகாட்டுதல்களையும் தலைமை ஆசிரியர்களாகிய நாம் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள நமது மாணவர்களுக்கு வழங்கிட வேண்டும்.

தொழிற்கல்வி படிப்புகளில் எந்த படிப்பினை தெரிவு செய்வது என்பதை குறித்த தெளிவு நம்முடைய மாணவர்களுக்கு குறைவாக காணப்படுவதால் அதனை தலைமை ஆசிரியர்கள் உள்வாங்கிக் கொண்டு மாணவர் களுக்கு சரியான வழிகாட்டுதல் களை வழங்கி பெருவாரியான மாணவர்களை உயர்கல்வி தொழில் படிப்புகளில் சேர்த்திடுதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட வகை தொழில் படிப்புகளை தவிர மாணவர்கள் பெருவாரியான தொழிற்கல்விகள் சார்ந்த விழிப்புணர்வு அற்று இருப்பதால் அவற்றின் சேராத நிலை உள்ளது. எனவே பல்வேறு அரசு மற்றும் அரசு உதவி பெறும் முன்னணி கல்வி நிறுவனங்களில் காணப்படுகிற முன்னணி தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் மாணவர்கள் சேர்ந்திட வழிகாட்டுதல் வேண்டும். கடந்த ஆண்டுகளில் மாணவர்களுக்கு சரியான விழிப்புணர்வு இல்லாததால் தான், சில மாணவர்கள் தாங்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணுக்கேற்ற சிறந்த கல்வி நிறுவனங்களில் சேர முடியாத நிலை இருந்தது. இந்நிலை இவ்வருடம் முற்றிலும் அகற்றப்படுதல் வேண்டும்.

கட் ஆப் மதிப்பெண் 180க்கு மேல் பெறும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களை முன்னணி உயர் கல்வி நிறுவனங்களில் சேர்த்திட வழிகாட்டுதல் வேண்டும். பொருளாதார சூழலில் பின்தங்கி உள்ள மாணவர்கள் தவறான உயர்கல்வி நிறுவனங்களில் போய் சேர்வதை தடுத்து, மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்குகின்ற கல்வி நிறுவனங்களில் சேராமல் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்த்திட வழிகாட்டுதல் வேண்டும் மாணவ, மாணவியர்களுக்கு ஆதார், சாதி சான்று உள்ளிட்டவைகள் இருப்பதை உறுதி செய்யவேண்டும். இச்சான்று கள் இல்லாத மாணவர்களை இ சேவை மையம் வாயிலாக உடனடியாக விண்ணப்பிக்க அறிவுறுத்த வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தை பொருத்தமட்டில் அதிகப்படியான மாணவர்கள் பாரா மெடிக்கல் கல்வி களில் சேரும் நிலை உள்ளது. அம் மாணவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் இல்லாததால் கடந்த ஆண்டுகளில் சில மாணவர்கள் கல்வியை முழுமையாக தொடராத நிலை காணப்படுகிறது. எனவே இவ்வருடம் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வுஎழுதி இருக்கிற மாணவர்களில் பாராமெடிக்கல் கல்வி நிறுவனங்களில் சேர விரும்புகிற மாணவர்கள் அனைவருக்கும் சரியான வழிகாட்டுதல்கள் வழங்குதல் தலைமை ஆசிரியர்களின் இன்றியமையாத கடமையாகும். உயர்கல்வி சேர்க்கை விகிதம் 100% என்பதை இலக்காகக் கொண்டு அனைத்து தலைமை ஆசிரியர்களும் செயல்படுதல் வேண்டும்

செவிலியர் பட்டப்படிப்புக்கு பல லட்சங்களை செலுத்தி படிக்கும் நிலை தற்போது உள்ளது. இதில் சரியாக அங்கீகாரம் பெற்ற மாணவர்களுக்கு சரியான பயிற்சி வழங்குகிற உயர்கல்வி நிறுவனங்களை மாணவர்கள் அடையாளம் கண்டு கொள்ளும் விதத்தில் மாணவர்களுக்கு தகுந்த வழிகாட்டுதல் வழங்குதல் அவசியம். சரியான உயர்கல்வி சரியான கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் தேர்வு செய்தல் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு அனைத்து தலைமை ஆசிரியர்களும் செயல்படுதல் வேண்டும். நமது மாவட்ட பன்னிரண்டாம் வகுப்பு முடித்த எந்த ஒரு மாணவனும் உயர்கல்வியை பெற்றுக்கொள்ள தடை ஏதும் இருப்பின் அவற்றை எனது கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். எனவே அனைத்து தலைமை ஆசிரியர்களும் இத்தலையாயப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு நமது மாவட்ட மாணவர்களின் நலனுக்காக செயல்படுவோம். இவ்வாறு தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் தலைமை ஆசிரியர்கள் உயர்கல்வி வழிகாட்டி சார்ந்த தெளிவினை பெற்றுக் கொள்வதற்காக, உயர்கல்வி வழிகாட்டி சார்ந்த கருத்துக்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் சுரேந்திரனால் வழங்கப்பட்டது. மேலும் HCL Tech நிறுவனத்தின் வாயிலாக வழங்கப்படும் உயர் கல்வி மற்றும் உயர்கல்வியுடன் அளிக்கப்படும் தொழிற்பயிற்சி சார்ந்த விளக்கங்கள், HCL Tech ஆலோசகர் பாலசுப்ரமணியனால் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பால தண்டாயுதபாணி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் பிற கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி




**கடலூர், ஏப். 20-**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் "பெண் குழந்தைகளை காப்போம். பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் கடலூர் காவலர் நல சமூக கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, பெண் கல்வியினை மேம்படுத்தவும். பெண்களுக்கு உயர்கல்வி அளித்து சமத்துவத்தை ஏற்படுத்துதல், குழந்தை திருமணத்தைத் தடுத்தல், வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் கல்வி இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு பள்ளிகளில் பயின்ற,ஏழை,எளிய மாணவிகளை சாதனையாளர்களாக உருவாக்கிட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் உயர்கல்வி பயின்றிடும் வகையில் மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் "புதுமைப்பெண்" திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் பெண்களின் மேம்பாட்டிற்காகவும், சம உரிமைக்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு சிறந்த விடியலின் மாற்றங்களை நோக்கி பெண் குழந்தைகள் மற்றும் பெண்களை முன்னேற்றும் வகையில் "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற திட்டம் குறைந்துவரும் குழந்தை பாலின விகிதம் பிரச்சனையை தீர்க்க மற்றும் குழந்தைகள் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பாலின பாகுபாட்டை தடுக்கும் நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பெண் குழந்தைகள் விகிதத்தை உயர்த்துதல். பாதுகாத்தல், பெண் குழந்தையின் கல்வி மற்றும் ஆண் பெண் சமத்துவத்தை உறுதி செய்தல் என்பது ஒரு முக்கியமான நோக்கமாகும்.

நமது இந்திய நாட்டில் பெண் குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ள 100 மாவட்டங்களில் "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம். பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள மருங்கூர் கிராமத்தில் "தேசிய பெண் குழந்தைகள் தினம்" துவக்கி வைக்கப்பட்டது.

2023–2024ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பாலின விகிதம் பிரச்சனையை தீர்க்க பெண் குழந்தைகள் கருவில் அழிக்கப்படுவதை தடுக்கவும், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுத்து நிறுத்தவும், பதின்மவயதில் கருவுறுதலை எதிர்க்கவும், குழந்தை திருமணத்தை தடுத்து பெண் குழந்தைகள் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பாலின பாகுபாட்டை தடுக்கும் நோக்கமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி அளவில் மாணவியர்களுக்கு நடைபெற்ற மினிமாரத்தான் போட்டியில் வெற்றிப் பெற்ற 4 மாணவிகளுக்கும், பெண் குழந்தைகளின் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய காவல் துறை, சமூக நலத்துறை, பள்ளிக்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுக்கும், சமூக சேவகர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் அவர்களது சேவையினை பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2 பெண் குழந்தைகள் உள்ள பெற்றோர்களுக்கு ஒரு குழந்தைக்கு தலா ரூ.25,000 வீதம் மொத்தம் 20 குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் வைப்புத் தொகைக்கான ஆணை வழங்கப்பட்டது.

பெண் குழந்தைகள் வளர்ப்பில் சிறப்பாக பங்களிப்பு செய்த பெற்றோர்களின் குழந்தைகள், குழந்தை திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகள், கைம்பெண்களின் பெண்குழந்தைகள், திருநங்கைகள் ஆகியோர்களுக்கு Selection of Champians Award என்ற அடிப்படையில் பெண் குழந்தைகள் கிரீடம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாநகராட்சி ஆணையாளர் அனு, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நல்லதுறை, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, மாவட்ட சமூக நல அலுவலர் ஏ.சித்ரா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் செல்வி, மாவட்ட சமூக நல கண்காணிப்பாளர் சுமதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பொதுமக்களின் அடிப்படை வசதிகள் குறித்து மேட்டூரில் ஆட்சியர் பிருந்தாதேவி கள ஆய்வு



**சேலம், ஏப். 20-**

"உங்களைத் தேடி உங்கள் ஊரில் "திட்டத்தின் கீழ் இரண்டாம் நாளான நேற்று மேட்டூர் பகுதியில் குடிநீர் விநியோகம், தூய்மைப் பணிகள், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி கள ஆய்வு மேற்கொண்டார். கள ஆய்வுக்குப் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமானது. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் இரண்டாம் நாளான நேற்று மேட்டூர் வட்டம். எம். காளிப்பட்டி ஊராட்சியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு, தினசரி கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு குறித்தும், விவசாயிகளுக்கு முறையாக அதற்கான தொகை செலுத்தப்பட்டு வருவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, எம். காளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு காலை உணவு தயாரிப்பதற்காக தரமான உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்து, சமையலறை சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகின்றதா என்பது குறித்தும், குறித்த நேரத்தில் குழந்தைகளுக்கு உணவு பரிமாறப்படுவது குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மைப்பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்துகேட்டறியப்பட்டது. மேலும், பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் முறையாக விநியோகம் மற்றும் அதன் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், இரண்டு நாள்கள் மேட்டூர் வட்டத்தில் கள ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ள அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் கள ஆய்வு குறித்த அறிக்கையினை இன்றையதினம் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் மனுக்களின் மீது தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து உரிய தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார், மேட்டூர் நகராட்சி ஆணையாளர் நித்தியா, மேட்டூர் வருவாய் வட்டாட்சியர் ரமேஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தொழில் முனைவோருக்கு முதல்வர் கடனுதவி வழங்கும் நிகழ்ச்சியை பார்வையிட்ட ஆட்சியர்



திருவண்ணாமலை, ஏப். 20–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் கைவினைத் தொழில் முனைவோருக்கு கடனுதவிகள் வழங்கி சிறப்புரையாற்றிய நிகழ்ச்சி ஒளிபரப்பு செய்யப்பட்டதை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் பார்வையிட்டு பேசியது, தமிழ்நாடு அரசு தையல் கலைஞர்கள். குயவர்கள் மற்றும் சிற்பிகள் போன்ற பல்வேறு கலை மற்றும் கைவினைத் தொழில்களில் ஈடுபடும் கைவினைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் நவீனமயமாக்களுக்கு ஆதரவு அளிக்க கலைஞர் கைவினைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

கலைஞர் கைவினைத் திட்டத்தினை இந்த ஆண்டு முதல் மாவட்டத் தொழில் மையம் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் கட்டட வேலை, மர வேலைப்பாடுகள், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், நகை வேலைப்பாடுகள், மண்பாண்டங்கள், சுடுமண் வேலைகள், சிகை அலங்காரம் மற்றும் அழகு கலை, துணி வெளுத்தல் மற்றும் தேய்த்தல் போன்ற 25 வகையான கைவினைத் தொழில் இனங்களுக்கு ரூ. 3 லட்சம் வரை வங்கி கடன் உதவியுடன் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம் வரை மானியத்துடன் கூடிய கடனும், 5 சதவீதம் வரை வட்டி மானியமும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடன்பெற 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சுய வேலை வாய்ப்பு திட்டங்களின் மூலம் ரூ. 1.50 லட்சத்திற்கு மேல் மானியம் பெற்றவர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க இயலாது. இருப்பினும் மாவட்டத் தொழில் மையம் மற்றும் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் மானியம் பெற்றவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் பொது மேலாளர். மாவட்டத் தொழில் மையம் அவர்களின் தலைமையிலான தேர்வுக் குழு மூலம் தகுதியான விண்ணப்பங்களை தேர்வு செய்யப்பட்டு வங்கிக்குப் பரிந்துரை செய்யப்படும். தேர்வுக் குழுவால் செய்யப்படும் தெரிவு விண்ணப்பங்கள் அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகள். கிராம வங்கிகள், கூட்டுறவு வங்கி. தாய்கோ வங்கி போன்ற வங்கிகளுக்கு கடன் வழங்கிடப் பரிந்துரை செய்யப்படும்.

வங்கியின் மூலம் கடன் ஒப்பளிப்புக் கடிதம் பெற்றவுடன் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் சார்ந்த திறன் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி முடிக்கப்பெற்றவுடன் கடன் பட்டுவாடா செய்யப்பட்ட விவரங்கள் பெற்றவுடன் வங்கிக்கு தொழில் முனைவோர்களுக்காக 25 சதவீதம் அதிகபட்சம் ரூ.50,000 வரை தமிழ்நாடு அரசால் மானியமும் 5 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும்.

தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் 492 விண்ணப்பங்கள் (திட்ட மதிப்பீடு ரூ.1426.70 லட்சம் மற்றும் மானியத்தொகைரூ. 163.56 லட்சம்) விண்ணப்பங்களுக்கு வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டதில், 362 (திட்ட மதிப்பீடு ரூ.1037.83 லட்சம் மற்றும் மானியத்தொகை ரூ.102.29 லட்சம்) வங்கியின் மூலம் கடன் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் கடன் ஒப்பளிப்பு பெறப்பட்டதில் தமிழ்நாடு அளவில் 5வது இடத்தில் உள்ளது.

மேலும் அரசு சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் தொழில் கடன்களை, கைவினைஞர்கள் பயன்படுத்தி தங்களது பொருளாதாரத்தை உயர்த்தி வாழ்க்கையில் வளம்பெறவும் இம்மாவட்டத்தை தொழில் வளமிக்க மாவட்டமாக உயர்த்திடவும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட தொழில் மையத்தினர், கலைஞர் கைவினைத் திட்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் வைப்பது தொடர்பாக நெல்லை ஆட்சியர் ஆலோசனை



நெல்லை, ஏப். 20–

திருநெல்வேலி மாவட்டம் வணிகநிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் வைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் வியாபாரிகள் சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வியாபாரிகள் சங்க பிரதிநிதிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்கள்.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 மற்றும் அதன்படியான விதிகள் 1948ன்படியும், தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958 மற்றும் அதன்படியான விதிகள் 1959 ன்படியும் மற்றும் தொழிற்சாலைகள் சட்டம், 1947 மற்றும் அதன்படியான விதிகளின்படியும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடைகள், வணிக நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் அனைத்து தொழில் நிறுவனங்களின் பெயர் பலகைகள் தமிழில் வைக்கப்பட வேண்டும். மேலும் தமிழ் அல்லாது பிற மொழியும் தேவைப்படும் பட்சத்தில் தமிழில் முதன்மையாகவும், பெரியதாகவும், போதிய இடைவெளியுடன் மற்ற மொழிகளை விட பார்வைக்கு மேலோங்கியும் இருக்க வேண்டும். பின்னர் ஆங்கிலத்தில் இரண்டாவதாகவும், பிற மொழிகளில் அடுத்ததாகவும் இடம் பெறலாம். திருநெல்வேலி மாவட்டத்தில், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் பிரதானமாக அமையப்பெற்றதை காட்சிப்படுத்துவதை உறுதி செய்வதற்காக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சுகுமார் தலைமையில், தொழிலாளர் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, உள்ளாட்சி அமைப்புகள், மாவட்ட அளவிலான வணிகர் சங்கங்கள், உணவக உரிமையாளர் சங்கங்கள், வேலையளிப்போர் சங்கங்கள் ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மேற்படி குழுவில் உள்ள அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட வணிகர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் அந்தந்த நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிகர் சங்கப் பிரதிநிதிகள், பெரு வணிகர்கள், உணவு நிறுவன உரிமையாளர்கள் மற்றும் அனைத்து தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், அனைத்து வணிக நிறுவனங்களிலும் தமிழில் பெயர்பலகை அமைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மே 15ம் தேதிக்குள் திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து வணிக நிறுவனங்களிலும் பெயர்ப்பலகை கட்டாயமாக தமிழில் பிரதானமாக அமையப்பெற வேண்டும் எனவும், மே 15ம் தேதிக்கு பின்னர், தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் வணிக நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழில் பெயர்ப்பலகை அமையப்பெறாத நிறுவனங்களின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அனிதா, தொழிலாளர் உதவி ஆணையாளர் திருவள்ளுவன், திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையாளர் சந்திரமோகன், அரசு அலுவலர்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட வணிகா சங்கப்பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமத்தை திறந்து வைத்த முதல்வர்



தென்காசி, ஏப். 20–

தென்காசி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட தொழில் மையம், தென்காசி அலுவலகம் மூலம் தமிழக அரசின் குறுங்குழும திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள 'ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமத்தை" தமிழ்நாடு முதலமைச்சர் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் அரசு சேக்கிழார் பள்ளி வளாகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட தொழில் மையம். தென்காசி அலுவலகம் மூலம் தமிழக அரசின் குறுங்குழும திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள 'ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமத்தை" தமிழ்நாடு முதலமைச்சர் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் அரசு சேக்கிழார் பள்ளி வளாகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து. ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர், தென்காசி நாடாமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீ குமார் ஆகியோர் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டு இக்குழுமத்தின் ஆடை வடிவமைப்பு மாதிரியை வெளியிட்டனர்.

மேலும், ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமம் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் அமைந்துள்ள பொதிகை சாய்பாபா அப்பேரல்ஸ் என்ற நிறுவனத்துடன் ஆயத்த ஆடைகள் உற்பத்திக்கான முதல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை பரிமாறிக்கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழக அரசின் குறுங்குழும திட்டம் என்பது குறு, மற்றும் சிறுநிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நீடித்த நிலைத்த தன்மையினை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ஒரே வகையான தொழில்கள் மேற்கொள்ளும் குறைந்தபட்சம் 20 நபர்களை ஒன்றிணைத்து குழுமத் தொழில்களை தொடங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், இயந்திரங்களை நிறுவுவதற்கான வசதிகள், பொதுவான வசதியாக்கல் மையங்களை நிறுவுதல் மற்றும் நிலையான உற்பத்தி நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைககள் அரசின் 90% நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டமாகும்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பேரூராட்சிக்குட்பட்ட சுற்றுவட்டார பகுதிகளில் பெண்கள் அதிக அளவில் தையல் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் கூட்டாக இணைந்து ஆயத்த ஆடைகள் தயாரிக்க உத்தேசித்து குழுமத் தொழில்கள் மேற்கொள்ள மாவட்ட தொழில் மையம் தென்காசி வாயிலாக குறுங்குழுமத் திட்டத்தில் விண்ணப்பித்தனர். தமிழ்நாடு அரசின் குறுங்குழுமத் திட்டம் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல் மற்றும் எம்ப்ராய்டரி தையல் தொழில் செய்வதற்கு ஒரு குறுங்குழுமம் அமைப்பதற்கு தமிழக அரசால் ஆணை பெறப்பட்டு ரூ.1.15 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழுமம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த திட்டத்தின் வாயிலாக நேரடியாக 80க்கும் மேற்பட்ட நபர்களுக்கும், மறைமுகமாக 200 க்கும் மேற்பட்ட நபர்களுக்கும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளது. இக்குழுமத்தின் மூலம் மெஷின் எம்பிராய்டரி, கை எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள், பேட்டர்ன் மேக்கிங், கட்டிங் மற்றும் ஸ்டிச்சிங், ஸ்டீம் அயர்னிங், பேக்கேஜிங் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தக் குழுமம் தென்காசி மாவட்ட தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்க உள்ளது என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மாரியம்மாள், ஆலங்குளம் ஒன்றியக் குழு தலைவர் திவ்யா மணிகண்டன், ஆலங்குளம் வட்டாட்சியர் ஒசன்னா, முன்னோடி வங்கி மேலாளர் கணேசன், தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கத் தலைவர் அன்பழகன், ஆலங்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் சிவகுமார், மாவட்ட தொழில் மைய அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆலங்குளம் பெண்கள் ஆயத்த ஆடை தயாரிப்பாளர்கள் குழும இயக்குநர் வளர்மதி மற்றும் குழும உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிதம்பரம் நகராட்சியில் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து அமைச்சர் ஆய்வு






கடலூர், ஏப். 20–

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் சிதம்பரம் நகராட்சி அலுவலகத்தில் சிதம்பரம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புற மக்களின் வளர்ச்சிக்காகவும் மேன்மைக்காகவும் ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். நகர்புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், அரசால் செயல்படும் திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைத்திட வேண்டும் என்பதற்காகவும் உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலைநகர் பேரூராட்சி மற்றும் குமராட்சி, பரங்கிப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 10 ஊரக ஊராட்சிகளுக்குட்பட்ட 36 குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம், அம்ரூத் 2.0 மற்றும் ஜல் ஜீவன் மிஷன் நிதியின் கீழ் செயல்படுத்த நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் ரூ.255.64 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது இப்பணிகள் 71 சதவீதம் முடிவடைந்துள்ளது. சிதம்பரம் நகராட்சியில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்க வேண்டும். தேவை ஏற்படும்பட்சத்தில் கூடுதல் பணியாளர்களை கொண்டு விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் சிதம்பரம் நகராட்சியைச் சேர்ந்த 81,154 மக்களும், அண்ணாமலை பேரூராட்சியைச் சேர்ந்த 23,510 மக்களும், குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியங்களை சேர்ந்த 10 ஊராட்சிகளுக்குட்பட்ட 22,902 மக்களும் பயன்பெறுவர். மேலும், சிதம்பரம் நகராட்சியைச் சேர்ந்த 3 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து புதியதாக அமைய உள்ள 2 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கும். 5 பழைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கும் குழாய் பதிக்கும் பணிகள் 67 கி.மீ நீளத்தில் 47கி.மீ பணிகள் முடிக்கக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 21 கி.மீ பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 60 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளது.

மேலும், வீட்டிற்கான குடிநீர் இணைப்புகள் வடிங்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் 36 சாலை பணிகளில் 27 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்புக்காக தோண்டப்பட்ட சாலைகளில் மீண்டும் சாலை போடும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு நகராட்சி பகுதிகளுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 127,566 பொதுமக்கள் பயன்பெறுவர்.

சிதம்பரம் நகராட்சியில் மேல வீதி மற்றும் தெற்கு வீதிகளில் 1,128மீ நீளமுள்ள சாலையில் 5756 நீளச் சாலையில் ஏற்கனவே மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைகளிலும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 2,228மீ நீளத்திற்கு சாலைகளின் இருபுறமும் கிரானைட்டால் ஆன நடைபாதை அமைக்கும் பணி ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகளில் மின் கம்பங்கள் மாற்றி அமைப்பது குறித்து நிலை, சாலையின் நடுவே உள்ள மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்ட விதம், சாலையின் பக்கவாட்டிடல்ல் மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்ட நிலை, சீரான மின் விநியோகம் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாகம். மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை சேர்ந்த அரசு அலுவலர்கள் வாரந்தோறும் இத்திட்டப் பணிகளின் நிலைக் குறித்து ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டு. அறிக்கையினை வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டப் பணிகளை வருகின்ற ஆகஸ்ட் மாதத்திற்குள் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுவரும் அனைத்து திட்டப் பணிகளையும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில்கொண்டு விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஆய்வின்போது சிதம்பரம் நகராட்சி ஆணையாளர் மல்லிகா, நகராட்சி பொறியாளர் சுரேஷ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கொள்ளிடம் வடிநிலக் கூட்டம்) காந்தரூபன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் குமார ராஜா, திட்ட அலுவலர் (தேசிய நெடுஞ் சாலை) வரதராஜன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயற்பொறியாளர் ஜெயந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# சம நியாயம் கொண்ட தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும்–மு.க.ஸ்டாலின்



# கவர்னர் ரவியை பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும்–மதிமுக தீர்மானம்



# தேவாலயங்களில் ஈஸ்டர் சிறப்பு பிரார்த்தனை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 20-4-2025 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்